**OS.No.142/2019 P.W.2-நந்தகோபால் 29.07.2026**

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

வாதி, பிரதிவாதிகளின் குடும்பத்தை சுமார் 15 வருடங்களாக தெரியும். வாதி, பிரதிவாதிகளுக்கு இடையில் பாகப்பிரிவினை ஏற்பட்டது குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். பாண்டுரங்கன் சொல்லி எனக்கு தெரியும். வாதி, பிரதிவாதிகளுக்கு 1996-ல் ஒரு விடுதலை பத்திரம் எழுதி கொடுத்தார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் நான் சொல்லி தயார் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். இந்த வழக்கில் உள்ள விவரங்கள் வாதி சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் வாதியும், வாதியின் குடும்பத்தாரும் சொல்லி எனக்கு தெரியும்.

2. வாதி, பிரதிவாதிகளின் பெற்றோர்கள் எப்பொழுது இறந்தார்கள் என்றால் 1988ல் வாதி, பிரதிவாதிகளின் அப்பாவும், அதற்கு முன்னதாகவே அவர்களது அம்மாவும் இறந்து போய்விட்டார்கள். வாதி, பிரதிவாதிகளின் தகப்பனார் இறந்த பிறகு தான் அவர்களுடைய தாயார் இறந்து போனார். இந்த வழக்கு விவரங்கள் சரியாக தெரியாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி, பிரதிவாதிகளிடையே 1996-ல் அக்கு விடுதலை பத்திரம் மூலமாக பாகம் பிரிக்கப்பட்டுவிட்டது, அது தெரியாமல் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. வாதி எழுதி கொடுத்த தவறான பிரமாண வாக்குமூலத்தை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றும், இந்த வழக்கு விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது என்றும் சொன்னால் சரியல்ல. வாதியிடமிருந்து பிரதிபலனை பெற்றுக் கொண்டு பொய் சாட்சியம் அளக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை